1975 ஏப்ரல் 18]

கரிசல்பட்டி உயர்நிலைப் பள்ளிக் கட்டடம்

* 702 வினா—திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்: மாண்புமிகு கல்வி–சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் வட்டம், ஆத்தூர் தொகுதி, கரிசல்பட்டியிலுள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தற்போது ஆய்வில் இல்லை.

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்: ஆத்தூர் தொகுதி, கரிசல்பட்டியிலுள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளியில் இரண்டு அறையுள்ள கட்டிடம்தான் இருக்கிறது. மீதி வகுப்புகள் தனியார் இடத்திலேயுள்ள கட்டிடங்களிலே இடம் பெற்றிருக்கின்றன. தனியார்கள் இந்தக் கட்டடங்கள் காலி செய்யப்பட வேண்டுமென்று நிர்ப்பந்திக்கிறார்கள். இதன் காரணமாக ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் இடையூறு இருப்பதால் அங்கே பள்ளிக் கட்டடத்தை உடனடியாகக் கட்ட அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அரசாங்கத்தின் சார்பாக 25,000 ரூபாய் செலவு செய்து கட்டடம் ஒன்று கட்டப்பட்டு அது இரண்டு அறை உள்ளதாக அமைந்துள்ளது. பள்ளிக் குழுவினர் 3 ஏக்கர் 14 செண்ட் நிலத்தைத்தான் கொடுத்திருக்கிறார்கள். மேற்கொண்டு 4 அறைகள் அமைந்த கூரைக் கட்டடத்தை தர உறுதி கூறியிருக்கிறார்கள். அதுபற்றிய விவரம் வரவில்லை. மேற்கொண்டு இரண்டு அறைகள் கொண்ட கட்டடம் கட்ட செயற்குறிப்பு, வரைபடம் ஆகியவற்றை திண்டுக்கல் நிர்வாகப் பதிவாளரிடம் கேட்கப்பட்டிருக்கிறது. அவைகள் கிடைத்ததும் இதிலே ஆவன செய்யப்படும்.

இடைநிலை ஆசிரியர்களது கோரிக்கை

* 703 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு கல்வி–சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1974 மார்ச்சு மாதத்தில் இடைநிலை ஆசிரியர் குழு ஒன்று கல்வி அமைச்சர் அவர்களைச் சந்தித்து கோரிக்கை ஏதேனும் தெரிவித்ததா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?